# வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை

மானியக் கோரிக்கை எண்.26

அறிவிப்புகள்

**2015–2016**

## திரு.ஆர். வைத்திலிங்கம்

வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர்

## வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

### புதிய அறிவிப்புகள் 2015–16

1. தமிழ் நாடு அரசு அலுவலர்களுக்காக இடமாற்ற குடியிருப்புகள் (**Transit Quarters**) கட்டும் திட்டம்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, இடிக்கப்படவுள்ள, சிதிலமடைந்த தமிழ்நாடு அரசு அலுவலர் குடியிருப்புகளில் குடியிருக்கும் அரசு ஊழியர்களுக்கு புதிய குடியிருப்புகள் கட்டப்படும் வரை தற்காலிக குடியமர்வு அளிக்கும் பொருட்டு புரசைவாக்கம் பராக்கா சாலை அருகில் 170 அடுக்குமாடி இடமாற்ற குடியிருப்புகள் ரூ.39.31 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

## 2. கூட்டு உள்ளூர் திட்டப்பகுதிகள் விரிவாக்குதல்

விழுப்புரம் நகராட்சியில் மக்கள் தொகை பெருகிவருதாலும், கல்வி நிறுவனங்களுடன் வேலைவாய்ப்புகள் அதிகரிப்பதாலும் விழுப்புரம் நகராட்சி பெரும் வளர்ச்சியைக் கண்டுவருகிறது. அதேபோல், கோயில் நகரமாகிய கும்பகோணமும் புனிதத்தலமாக பெரும் வளர்ச்சியைக் கண்டுவருகிறது. எனவே, இவ்விரு கூட்டு உள்ளூர் திட்டக்குழுமங்களின் வளர்ச்சியைத் திட்டமிட்டு முறைப்படுத்தும் பொருட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, இந்நகரங்களை சுற்றியுள்ள பகுதிகளையும் அவற்றுடன் இணைத்து, விழுப்புரம் மற்றும் கும்பகோணம் கூட்டு உள்ளூர் திட்டக்குழுமங்கள் விரிவாக்கப்படும்.



## 3. போக்குவரத்து நெரிசலைக் குறைத்து சீரான போக்குவரத்தை உறுதி செய்ய நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு நிதியுதவி வழங்குதல்

நகரங்கள் விரிவடைந்து வருவதாலும், மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்து வருவதாலும் பெருகும் வாகன போக்குவரத்து, சாலைகளில் நெரிசலை உருவாக்கியுள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, போக்குவரத்தைச் சீர்செய்ய போக்குவரத்து மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், மாநகராட்சிகளுக்கு தலா ரூ.1.00 கோடியும் நகராட்சிகளுக்கு தலா ரூ.50.00 இலட்சம் வரை மொத்தம் ரூ.5.00 கோடி இந்நிதியாண்டில் நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து மானியமாக வழங்கப்படும்.

4. பூங்காக்களை மேம்படுத்த உள்ளாட்சிகளுக்கு நிதியுதவி வழங்குதல்

பொதுமக்களின் நலனுக்காக பூங்காக்களை மேம்படுத்தி பராமரிக்க வேண்டியது அவசியமாகிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, பூங்கா மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், தற்போது வழங்கப்பட்டுவரும் ரூ.10.00 இலட்சம் மானியத்தொகை ரூ.15.00 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படுவதுடன், 30 பூங்காக்களை மேம்படுத்த நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு தலா ரூ. 15.00 இலட்சம் வரை மொத்தம் ரூ.4.50 கோடி இந்நிதியாண்டில் மானியமாக வழங்கப்படும்.



5. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும களப்பணி அதிகாரிகளுக்கு 5 வாகனங்கள் அளித்தல் :

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், திட்டமிடுதல் மற்றும் திட்ட அனுமதி வழங்குதல், அமலாக்கம், ஒருங்கிணைப்பு, நகர வளர்ச்சித் திட்டங்கள் செயலாக்கல் மற்றும் சொத்து மேலாண்மை ஆகிய பணிகளை மேற்கொள்கிறது. இப்பணிகளைச் செவ்வனே செய்யும்பொருட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, துணைத்திட்ட அமைப்பாளர்கள் வரையிலான களப்பணி அதிகாரிகளுக்கு படிப்படியாக வாகனங்கள் அளிக்கப்படும். முதற்கட்டமாக இந்நிதியாண்டில், 5 வாகனங்கள் புதிதாக வாங்கி அளிக்கப்படும்.

6. தனித்த உள்ளூர் திட்டப் பகுதியாக உருவாக்குதல்

நெல்லியாளம் சுற்றுலாத்தலமாக முக்கியத்துவம் பெற்று வருவதாலும், மாநிலத்தின் பிற நகராட்சிகள் அனைத்தும் உள்ளூர் திட்ட குழுமங்களாக அறிவிக்கை செய்யப்பட்டு விட்டதாலும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, நெல்லியாளம் இரண்டாம் நிலை நகராட்சி, தனித்த உள்ளூர் திட்ட குழுமமாக அறிவிக்கப்படும்.

7. புராதன நகரங்களைப் பேணிப் பாதுகாக்க உள்ளாட்சிகளுக்கு நிதியுதவி வழங்குதல்

கலாச்சார, மதம் சார்ந்த, கலை மற்றும் கட்டிட கலையில் சிறந்த நகரங்களின் புராதனத்தைக் காக்கும் பொருட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, புராதன நகர மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து, 6 புராதன நகரங்களுக்குத் தலா ரூ.1.00 கோடி ரூபாய் வரை மானியமாக வழங்கப்படும்.